பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

23 08 2024 **FRIDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. உக்ரைனில் தாம் மேற்கொண்ட பயணம் வரலாற்று சிறப்புமிக்கதாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள திரிபுரா மாநிலத்தின் மீட்பு பணிகளுக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கியிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
3. அனைத்து கால நிலைகளையும் எதிர்கொண்டு அதிக விளைச்சல் தரக்கூடிய குறுகியகால பயிர்களை அரசு ஊக்குவித்து வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
4. நேபாளத்தில் ஆற்றில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 14 இந்தியர்கள் உயிரிழந்தனர்.
5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்--

**<<<<<>>>>>>**

உக்ரைனில் தாம் மேற்கொண்ட பயணம் வரலாற்று சிறப்புமிக்கதாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் தலைநகர் **Kyiv** நகரில் அந்நாட்டு அதிபர் திரு **Volodymyr Zelenskyy**-யுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

தமது உக்ரைன் பயணம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் தமது இந்த பயணம் அமைந்ததாகவும், அந்நாட்டு அதிபருடனான பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமான வகையில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டில் அமைதி நிச்சயம் ஏற்படும் என்று இந்தியா உறுதியுடன் நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் அரசு மற்றும் அந்நாட்டு மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி அதில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், உக்ரைனில் அமைதி பேச்சுவார்த்தையை தொடர்வது குறித்து அந்த நாடுதான் முடிவு எடுக்க வேண்டும் கூறினார்.

ஏற்கனவே உக்ரைனில் போரை முடிவுக்கொண்டுவர அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

முன்னதாக, **Kyiv**– நகரில் போரின்போது கொல்லப்பட்ட குழந்தைகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள தேசிய நினைவிடத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி மரியாதை செலுத்தினார்.

அவருடன் உக்ரைன் அதிபர் திரு **Volodymyr Zelenskyy**-யும் சென்றிருந்தார்.

ரயில் மூலம் **Kyiv**– நகரை சென்றடைந்த பிரதமருக்கு அங்கு வசிக்கும் இந்தியர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

**Kyiv**–வில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கும் பிரதமர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

**<<<<<>>>>>>**

மத்திய அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் மரபுகளை கைவிட்டு, நாட்டில் குற்றவியல் நீதி அமைப்பை வலுப்படுத்தியிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இடையே உரையாற்றிய அவர், சமகால சட்ட அமைப்பில் தடயவியல் அறிவியலின் முக்கிய பங்கினை சுட்டிக்காட்டினார்.

தடய அறிவியல் என்பது வெறும் தொழில்நுட்பத்துறை மட்டுமல்ல, நாட்டின் குற்றவியல் நீதி அமைப்பின் அடித்தளமாக விளங்குகிறது என்று அவர் கூறினார்.

குற்றவியல் நீதி அமைப்பு அதன் ஜனநாயகத்தையும், அதன் வளர்ச்சியையும் வரையறுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதில் தடய அறிவியலின் பங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளதாக திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

**<<<<<>>>>>>**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள திரிபுரா மாநிலத்தில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்காக மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கியிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், விமானப்படையின் நான்கு ஹெலிகாப்டர்கள், ராணுவ குழுவினர், தேசிய பேரிடர் மீட்பு படையை சேர்ந்த 11 குழுவினர் ஏற்கனவே அனுப்பப்பட்டு, மீட்புப்பணியில் ஈடுபட்டிருப்பதாக கூறியுள்ளார்.

இந்த கடினமான தருணத்தில் திரிபுரா மக்களுக்கு மத்திய அரசு தோளோடு தோள் நின்று அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

திரிபுராவில் வெள்ள நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்காக மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு 40 கோடி ரூபாய் முன்தொகையை மத்திய அரசு விடுவித்திருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

உலக அளவில் மிகவும் சக்தி வாய்ந்த கடலோர நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவாகி வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

மும்பை துறைமுகத்தில் இன்று பல்வேறு திட்டங்களை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தொழில்துறையினருக்கு ஏற்ற உருமாற்றங்களை மும்பை துறைமுகம் அடைந்து வருவதாக அவர் கூறினார்.

இந்தியாவின் சுயசார்பு பயணத்திற்கான பாதையில் மும்பை முக்கிய பங்கினை வகிப்பதாக திரு சர்பானந்த சோனாவால் குறிப்பிட்டார்.

மும்பை துறைமுகம் சார்பில் சுற்றுலா துறை குறித்த கையேட்டையும் அமைச்சர் வெளியிட்டார்.

**<<<<<>>>>>>**

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கவும் மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கிசான் கடன் அட்டைகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்குவது, விளைப்பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் உரிய விலை கிடைப்பதை உறுதி செய்வது என பிரதமர் திரு நரேந்திர மோடி, விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதாக கூறினார்.

பருவநிலை மாற்றம் காரணமாக வேளாண்துறை மோசமான பாதிப்பை எதிர்கொள்வது கவலையளிக்கக்கூடியது என்றும் அவர் கூறினார்.

அனைத்து கால நிலைகளையும் எதிர்கொண்டு அதிக விளைச்சலை தரக்கூடிய குறுகியகால பயிர்களை அரசு ஊக்குவித்து வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கும் குற்றங்களை கையாளும் பெண் காவலர்களுக்கு சிறப்பு திறன் பயிற்சி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று காவல்துறையினருக்கு குடியரசுத் தலைவர், உள்துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் பதக்கங்களை வழங்கி அவர் பேசினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்களை விசாரித்து தீர்ப்பதற்கு இந்த பயிற்சி பெரிதும் உதவும் என்று அவர் கூறினார்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதாகவும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

நேபாளத்தில் பேருந்து ஒன்று ஆற்றில் கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 14 இந்தியர்கள் உயிரிழந்தனர். 16 பயணிகளை மீட்புக்குழுவினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பொக்காரா என்ற இடத்தில் இருந்து காட்மாண்டு நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து, **Tanahu** நெடுஞ்சாலையில், **Aina Pahara** என்ற இடத்தில் **Marsyandgi** ஆற்றில் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது

அந்த பேருந்தில் 40 இந்தியர்கள் பயணம் செய்ததாகவும், அவர்களில் உயிரிழந்தவர்கள் குறித்த விவரம் கோரப்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரவிக்கிறார்.

<<<<<>>>>>>

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய கல்வி அமைச்சகம், மாநில அரசுகளுக்கு சுற்றிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்த விவரங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

உச்சநீதிமன்ற உத்தரவையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>>

ஆந்திர மாநிலம் அனகாபள்ளி தனியார் தொழிற்சாலை தீ விபத்தில் தொழிலாளர்கள் உயிரிழந்தது குறித்து விளக்கம் அளிக்குமாறு அம்மாநில தலைமைச்செயலாளர் மற்றும் காவல்துறை தலைமை இயக்குனருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தனியார் மருந்து தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு மற்றும் சட்டப்பூர்வ நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதை விசாரணை நடத்தி உறுதி செய்ய வேண்டும் என அந்த ஆணையம் அதில் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், அது தொடர்பான அறிக்கையை இரண்டு வார காலத்திற்குள் அளிக்க வேண்டும் என்று அந்த ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது

<<<<<>>>>>>

விமானங்களை இயக்குவதற்கு உரிய தகுதி பெறாத ஊழியர்களை பயன்படுத்தியதாக கூறப்படும் புகாரைத்தொடர்ந்து, ஏர் இந்தியா நிறுவனத்திற்கு 90 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏர் இந்தியா நிறுவனத்தின் பயிற்சி இயக்குனருக்கு மூன்று லட்சம் ரூபாயும், செயல்பாட்டு இயக்குனருக்கு ஆறு லட்சம் ரூபாயும் கூடுதல் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக விமான போக்குவரத்து இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட விமானிக்கு எச்சரிக்கையையும் இயக்குனரகம் விடுத்துள்ளது.

ஏர் இந்தியா நிறுவனம் கடந்த மாதம் சமர்ப்பித்த அறிக்கையின் மூலம் இந்த தகவல் வெளியானதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இன்று இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் மாலத்தீவை வென்றது.

---------------------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.
ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும், இப்போட்டியின் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் **Pulkit**-ம் 73 கிலோ எடைப்பிரிவில் **Mansi**-ம் 43 கிலோ எடைப்பிரிவில் **Aditi Kumari**-ம், 57 கிலோ எடைப்பிரிவில் **Neha** –வும் தங்கப்பதக்கம் வென்றனர்.
இப்போட்டியில் இந்தியா இதுவரை நான்கு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

--------------------

கொரியா கோப்பைக்கான சைக்கிள் போட்டியில் இந்தியாவின் **Esow Alben** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

கொரியாவின் **Yang Yang**–ல் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------------

மாலத்தீவில் நடைபெற்றுவரும் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கிஷோர் குமார் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>>**